FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS) (Under Section 154 Cr.P.C.) (குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8120375

1. District மாவட்டம் ஈரோடு PS காவல்நிலையம் அ.நி.க.பிரிவு ஈரோடு. Year ஆண்டு 2025 FIR No. முத.அ. எண் 66/PC/2025 Date நாள் 11.09.2025

2. (i) Act சட்டம் PC Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள் 7(a)

(ii) Act சட்டம் Sections பிரிவுகள்

(iii) Act சட்டம் Sections பிரிவுகள்

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் புதன்கிழமை Date from நாள் முதல் 10.09.2025 Date to நாள் வரை

Time Period நேர அளவு Time from நேரம் முதல் 11.15 hrs Time to நேரம் வரை 14.00 hrs.

(b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.09.2025 Time நேரம் 16.00hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III Time நேரம்

4. Type of Information : Written/ Oral தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுந்து மேலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 70.கி.மீ மேற்கு

Beat Number முறைக் காவல் எண் (b) Address முகவரி சார்பதிவாளர் அலுவலகம், சத்தியமங்கலம், ஈரோடு,

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையிட்டாள்/ தகவல் தந்தவர் பெயர் S. பேதுபதி (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் சுப்பிரமணி

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 1992 (d) Nationality நாட்டினம் இந்தியன் (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue வழங்கப்பட்ட நாள் Place of Issue வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் இ-சேவை மையம் நடத்துபவர் (g) Address கதவ.எண். 04, சின்னபாளையம், தண்டுகோம்பாளையம் கிராமம், நம்பியூர் வட்டம், ஈரோடு மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. தமிழ்செல்வன், சார்பதிவாளர், சத்தியமங்கலம் சார்பதிவகம் ஈரோடு மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

சம்பவிக்கப்பமகிறது

தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து

இணைக்கப்பட்டள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
11/09/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
11.9.2025

15. Date & Time of despatch to the court: 11.09.2025 19.00hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. ராஜேஸ்வரன்,
Rank: நிலை காவல்துறை No. எண் .....
உ.கு.க பிரிவு, ஈ-ரோடு.

Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 06/AC/2025 u/s 7(a) of PC Act, 1988 as amended in 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M ரேகா ஆகிய நான் 11.09.2025 தேதி மாலை 16.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திரு. S.சேதுபதி, த/பெ சுப்பிரமணி, கதவு எண் 4, சின்னபீளமேடு, சுண்டக்காம்பாளையம் கிராமம், நம்பியூர் வட்டம், ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டிருந்த ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர் S.சேதுபதி, த/பெ சுப்பிரமணி, கதவு எண் 4, சின்னபீளமேடு, சுண்டக்காம்பாளையம் கிராமம், நம்பியூர் வட்டம், ஈரோடு மாவட்டம். செல்: 9578578511. பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கரூங்கல்பாளையம், ஈரோடு. அம்மா, நான் மேற்கண்ட முகவரியில் என்னுடைய குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் எனது நண்பரும், அட்வகேட்டுமான ஜெயசந்தோஷ் என்பவரும் சேர்ந்து சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகம் அருகில் ஸ்ரீ ஆன்லைன் சர்வீஸ் என்ற பெயரில் பத்திர எழுத்தர் அலுவலகம் வைத்துள்ளோம். ஆவண பதிவில் லீகல் சம்மந்தமான வேலைகளை ஜெயசந்தோஷ் அவர்கள் பார்த்துக்கொள்வார். நான் அவர் தயார் செய்யும் ஆவணங்களை டைப் செய்வது, இதர ஆன்லைன் வேலைகள் மற்றும் பத்திர பதிவு சம்மந்தமாக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று வருவது போன்ற வேலைகளை நான் பார்த்துக்கொள்வேன். சத்தியமங்கலம் அரியப்பம்பாளையத்தை சேர்ந்த நல்லம்மாள் என்பவருக்கு சத்தியமங்கலம் சார்பதிவக கிரைய ஆவணம் எண் 2277/1990 ன்படி அரியப்பம்பாளையம் கிராமம், நத்தம் சர்வே எண் 13/4, தற்சமயம் புதிய நத்தம் எண் 254/15, பட்டா எண் 233ல் உள்ள 1916 சதுரடி கொண்ட இடம் மற்றும் அதில் உள்ள RCC தார்சு வீடு ஆகியவற்றை அவரது மகன்வழி பேரன் திரு.அருண் என்பவருக்கு செட்டில்மெண்ட் எழுதிவைப்பது தொடர்பாக ஒரு ஆவணம் சத்தியமங்கலம் சார்பதிவகத்தில் பதிவு செய்யவேண்டி இருந்தது. அந்த ஆவணத்தின் வரைவு நகலை ஜெயசந்தோஷ் கொல்ல நான் டைப்செய்தேன். அதனை எடுத்துக்கொண்டு சார்பதிவாளரிடம் சரிபார்ப்பதற்காக நேற்று 10.09.2025ம் தேதி காலை சுமார் 11.15 மணிக்கு சத்தியமங்கலம் சார்பதிவகம் சென்று சார்பதிவாளர் திரு.தமிழ்ச்செல்வன் அவர்களிடம் கொடுத்தேன். அவர் என்னிடம் அந்த சொத்து சம்மந்தமான சில விபரங்களை கேட்டு தெரிந்துகொண்டு, அந்த வரைவு நகலை படித்துபார்த்துவிட்டு, எல்லாம் சரியாகத்தான் இருக்கு, இந்த ஆவணத்தை பதிவு செய்வதற்கு இவ்வளவு வாங்கி கொடுத்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டு, தனது கால்குலேட்டரில் 30000 என்று டைப்செய்து காட்டிவிட்டு, ரசனபிளாகத்தான் கேட்டிருக்கிறேன் என்று சொன்னார். நான் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் மீண்டும் கால்குலேட்டரில் 25000 ஐ டைப்செய்து காட்டினார். நான் சரி பார்ட்டியிடம் பேசிவிட்டு சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு, எனது அலுவலகத்திற்கு வந்துவிட்டேன். பின்னர் நான் இது சம்மந்தமாக அருணிடம் பேசியபோது, அவர் தொகை மிகவும் அதிகமாக உள்ளது,

அவ்வளவு எல்லாம் கொடுக்கமுடியாது, இதுக்கு எதுக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று கேட்டார். பின்னர் நான் மதியம் சுமார் 2 மணியளவில் சார்பதிவாளர் தமிழ்ச்செல்வன் அவர்களை அவரது அலுவலகத்தில் மீண்டும் சந்தித்து, சார் 25000 ரூபாய் சொன்னிங்க, பாட்டி அவருடைய பேரனுக்குத்தான் செட்டில்மெண்ட் எழுதிவைக்கிறாங்க, அதுக்கு தொகை அதிகமாக உள்ளது என்று சொல்கிறார்கள் என்று சொன்னபோது, அவர் சரி எவ்வளவுக்கு பண்ணிக்கலாம் என்று சொல்லிவிட்டு, ஒரு 15000 க்கு பண்ணிக்கலாம், அதுக்கு கம்மியாக தொகையை குறைக்கமுடியாது, எம்.ஓ.டி அந்தமாதிரி டாக்குமெண்டுக்கு கொடுக்காட்டி பரவாயில்ல, இதுக்கெல்லாம் கவனிக்காட்டி எப்படி என்று சொன்னார். நான் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் யோசித்து பார்த்ததில் சார்பதிவாளருக்கு லஞ்சமாக ரூ.15000/- கொடுக்க விருப்பமில்லை. அருணிடம் சார்பதிவாளர் முடிவாக ரூ.15000/- லஞ்சம் கேட்டுள்ளார், எனக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை, லஞ்ச ஒழிப்புதுறையில் புகார் கொடுக்கலாமா என்று கேட்டேன். அவர் எனக்கும் லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, நீங்களே என்ன செய்ய வேண்டுமோ அதை செய்யுங்கள், நான் உங்களுக்கு தேவையான ஒத்துழைப்பை நான் தருகிறேன் என்று சொல்லி, பணம் ரூ.15,000/- என்னிடம் கொடுத்தார். இதர கட்டணங்களை பத்திரப்பதிவுக்கு பின்னர் கொடுத்துவிடுவதாகவும் தெரிவித்தார். எனவே நல்லம்மாள் என்பவர் தனது சொத்தை அவரது பேரன் அருணின் பெயரில் செட்டில்மெண்ட் எழுதிவைப்பது சம்மந்தமாக ஆவணம் பதிவு செய்வதற்கு என்னிடம் லஞ்சமாக ரூ.15000/- கேட்கும் சத்தியமங்கலம் சார்பதிவாளர் தமிழ்ச்செல்வன் என்பவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (S. Sethupathi) 11/09/2025.

Sir, Received the above said computer typed complaint on 11.09.2025 at 16.00 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The reliability and the antecedents of the complainant were found to be genuine and the accused reputation was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.06/AC/2025 u/s 7(a) of the PC Act, 1988 as amended in 2018 today on 11.09.2025 at 18.00 hrs. Sd/- (xxxxxxxx) 11.09.2025 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tmt.S.Sethupathi, S/o Subramani, D.No.4, Sinnapeelamedu, Sundakampalayam Village, Nambiyur Taluk, Erode District is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

(M.Rekha) 11.9.25
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.